# அறிவியல் நோக்கில் மாந்திரீகக் கலை

**பிரேமகலா.கே**

**ஆய்வுச்சுருக்கம்:**

அறிவியற் புலத்தில் மாந்திரீகக் கலையானது சிறப்பான தனித்துவம் பெற்று விளங்கு கின்றது. மாந்திரீகம் என்பது கடுமையான மந்திரச் சடங்குகளின் வழியாக நிகழ்த்தப்படுகின்ற ஒரு வழிபாட்டு முறையாக உள்ளது. ஒரு மந்திரத்தை மீண்டும் மீண்டும் உச்சரிக்கும் போது அபூர்வசக்தி ஏற்பட்டு அங்கு மாந்திரீகம் செல்வாக்குச் செலுத்துவதாகச் சொல்லப்படுகின்றது. இது பண்டைய காலம் தொட்டு தற்காலம் வரையிலும் அனைத்துச் சமயத்தினரிடையேயும் ஒரு மருத்துவக் கலையாகப் பயிலப்பட்டுவரும் பாங்கினைக் காணலாம். மக்கள் தோன்றிய நாளிலிருந்தே இம் மாந்திரீகமும் மருத்துவமும் தோன்ற ஆரம்பித்துவிட்டன. இத்தகைய மாந்திரீகமானது தன்னுள் பல மந்திர முறைகளைக் கொண்டமைந்துள்ளதோடு மந்திரித்தல் மூலமாகவே மனித உடம்பில் தோன்றும் பிணிகளுக்கு மருத்துவம் பார்க்கின்றது. அந்தளவிற்கு மாந்திரீகக் கலையுள் ஓர் அபூர்வ சக்தி இருப்பதாகவும் அச்சக்தியே அறிவியற் தளத்தினுள் நின்று காப்பதாகவும் மக்கள் நம்புகின்றனர். மாந்திரீகம் என்றாலே மனிதனுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியது, பயங்கரமானது, சதி செய்வது என மக்கள் மத்தியில் தவறான விதை விதைக்கப்பட்டு விட்டது. ஆனால் இது காலம் காலமாக பாரிய அளவில் மக்களுக்கு நன்மை செய்யும் முயற்சியாக நீங்காப் பிணியையும் நீக்கும் வல்லமையைக் கொண்டதாகவும் இருந்து வருகின்றது. இங்கு இவ்வாய்வுத் தளமானது இலங்கையின் மலையகக் கிராமப்புறங்களில் வாழும் இந்து மக்களின் வாழ்வியலில் ஊடுருவியுள்ள மாந்திரீக மருத்துவத்தை எல்லையாகக் கொண்டு வரையறுக்கப்பட்டுள்ளது. மாந்திரீகத்தின் மூலம் நோயைக் குணப்படுத்தும் மருத்துவ முறைகளையும் மற்றும் சில அரிதான மூலிகைகளின் இரகசியத்தையும் வெளிக் கொணர்தலை நோக்கமாகக் கொண்டு அமைவதுடன், இது தொடர்பில் சமூகத்திற்கு விளக்கமளிப்ப தாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. விபரண ஆய்வு முறையியலுக்கமைவாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வானது தேவையேற்படும் போது தரவுகள் உள்ளடக்கப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்வழி சித்தமருத்துவத்துடனும் ஆயுர்வேதத்துடனும் இணைந்து மாந்திரீக மருத்துவம் செயல்படுவதனை அறியலாம். பெரும்பாலும் இந்த மாந்திரீகத்தினால் செய்யும் மருத்துவம் மலையகக் கிராமப்புறங்களில் ஒரே மாதிரியான செயன்முறைகளைக் கொண்டே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இவ்வாறு பண்டையகாலம் தொடக்கம் தற்கால நடைமுறைகளிலும் இம்மருத்துவக் கலை மக்களது நம்பிக்கையுடன் பின்னிப்பிணைந்துள்ள பாங்கினை அறிந்துக் கொள்ள இந்த ஆய்வு துணைபுரிகிறது.

**திறவுச்சொற்கள்:** அறிவியல், மந்திரம், மாந்திரீகம், மூலிகை, சித்தமருத்துவம்,

இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
kesawanpremakala043@gmail.com